# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1802 - 2013 මාර්තු මස 15 වැනි සිකුරාදා - 2013.03.15

*1802 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 32 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2013, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, மாச்சு மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# நானாவித அறிவித்தல்கள்

## இலங்கைத் தகவல் தொழில்நுட்பவியல் தொழிற் சம்மேளனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

மொஹான் லால் கிரேரு, பா. உ. ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின்கீழ் "இலங்கைத் தகவல் தொழில்நுட்பவியல் தொழிற் சம்மேளனத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த இலங்கைத் தகவல் தொழில்நுட்பவியல் தொழிற் சம்மேளனத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

- தகவல் மற்றும் தொடர்புகள் தொழில்நுட்பவியல் தொழிலின் ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அபிவிருத்தியை மேம்படுத்தலும், ஊக்குவித்தலும், வளர்த்தலும், அதன் நலன்களைப் பாதுகாகத்தலும் ;
- தகவல் மற்றும் தொடர்புகள் தொழல்நுட்பவியல் தொழிலின் ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்காக மதியுரைசார், ஆலோனைசார் அல்லது ஒருங்கிணைத்தற் குழுவாகச் செயலாற்றுதல் ;
- கூட்டுத்தாபன உறுப்பினர்களுக்காக வேலை மற்றும் நடத்தை தொடர்பான ஒழுக்கவியற்சார் மற்றும் உயர்தொழிற்சார் நியமங்களை ஊக்குவித்தலும், வளர்த்தலும், அவற்றை மேம்படுத்துவதற்கு அவசியமானவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தலும் ;
- இததொதொ சம்மேளனத்தினதும் தகவல் மற்றும் தொடர்புகள் தொழில்நுட்பவியல் தொழிலினதும் நலன்களை மேம்படுத்தும் நோக்குடன் அரசாங்கத்துடன் அல்லது எவையேனும் பகிரங்கக் குழுக்களுடன் இணைந்துசெயலாற்றுதலும் ;

பிறவும்.

மொஹான் லால் கிரேரு,
பாராளுமன்ற உறுப்பினர்,
கொழும்பு மாவட்டம்.

3-621

---

## மனு தொடர்பான விளம்பர அறிவித்தல்

சிவில் நியாயாதிக்கத்தை செயற்படுத்தும் கொழும்பில் நடாத்தப்படும் மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்

வத்தளை மாபோலை பங்களாவத்தை வீதி இலக்கம் 6 சூரி டிரேடிங் பிரைவேட் லிமிட்டெட் நிறுவனத்தின் விடயத்திலும் ;

ஒடுக்குவதற்கான விண்ணப்பம் : 02/2013 (சி.ஒ)

மற்றும்

2007 ஆம் ஆண்டின் இல. 7 கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பகுதியின் கீழ் நீதிமன்றத்திற்கு ஒடுக்குவதற்கான மனு விடயத்திலும் ;

கோற்றா பர்மா (எம்) எஸ் பி. எச். டி, இல. 1 மற்றும் 2, ஜலான் டிடிசி 12 செங் தொழில்துறை தோட்டம் 75250, மேலகா மலேஷியா

- மனுதாரர்-

மேற்கூறப்பட்ட கம்பனியை மேல் மாகாண மேல் நீதிமன்றம் கொழும்பு (சிவில் நியாயாதிக்கப் பிரயோகம்) ஒடுக்குவதற்கான விண்ணப்பம் 2013 ஆம் ஆண்டு தை மாதம் 4 ஆந் திகதி மலேசியா மேலகா, ஜலான் டிடிசி 12 செங் தொழில்துறை தோட்டம் 75250, இல. 1 மற்றும் 2 இல் அமைந்துள்ள கோற்றா பர்மா (எம்) எஸ். பி. எச். டி. மேற்குறித்த நீதிமன்றத்தில் 2013 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 29 ஆந் திகதி நீதிமன்றத்திற்கு முன் விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ள தென்பதுவும் மேற்குறித்த மனு சம்பந்தமாக மேற்குறித்த கம்பனிக்கு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவர் எவராவது ஆதரவு அல்லது எதிர்ப்புக் கட்டளை பிறப்பிக்க விரும்பின் விசாரணையின் போது நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ அல்லது அந்நேரத்திற்கான பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி மூலமாகவோ தோற்றலாம் எனவும் மேற்படி கம்பனிக்கு எந்தவொரு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்பு செய்தவருக்கு மனுவின் ஒரு பிரதி தேவைப்படின் கீழ்க்கையொப்பமிட்டவரினால் அதற்குரிய கட்டணத்தின்படி பணக்கொடுப்பனவின் பிரகாரம் வழங்கப்படு மெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நித்தி முருகேசு மற்றும் அசோசியேட்ஸ்,
மனுதாரரின் சட்டத்தரணிகள்,
இல. 28 (2 ஆம் மாடி),
டபிள்யு. ஏ. டி. ராமநாயக மாவத்தை,
கொழும்பு - 02.

**குறிப்பு**.- மேற்குறித்த மனுவின் விசாரணையின்போது நேரில் சமூகமளிக்க எவராவது நோக்கம் கொள்வதாயின் அவர் அல்லது அவரின் நோக்க அறிவித்தலை எழுத்தில் தெரிவித்து மேற்குறித்த சட்டத்தரணிகள் நித்தி முருகேசு மற்றும் அசோசியேட்ஸ் நிறுவனத்திற்கு நேரில் அல்லது கடித மூலம் சமர்ப்பிக்க வேண்டும். அல்லது கம்பனியாயின் கம்பனியின் பெயர் விலாசத்துடன் நபரினால் அல்லது கம்பனியினால் அல்லது அவரது பதிவுசெய்யப்பட்ட சட்டத் தரணியினால் (அவ்வாறு இருப்பின்) கையொப்பமிடப்பட்டு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பப்படலாம்.

தபால் மூலம் அனுப்பப்படுவதாயின் மேற்குறித்தவருக்கு போதியகால அவகாசத்துடன் கிடைக்கக்கூடியதாக 2013 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 21 ஆந் திகதி பிற்பகல் 1.00 மணிக்கு பிந்தாமல் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

நித்தி முருகேசு மற்றும் அசோசியேட்ஸ்,
மனுதாரரின் சட்டத்தரணிகள்.

3-648

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.